தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 260/ந/2024

நாள். 18.12.2024

| | | |
|---|---|---|
| திரு. ர.தௌலத் ஹுசைன் கான்,<br>மணப்பாறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>மணப்பாறை நகராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | – | எதிர்மனுதாரர் |

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, காந்திநகர், கதவு எண். 93T/362 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. தௌலத் ஹுசைன் கான் என்பவரின் 30.08.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.08.2023 அன்று பெறப்பட்டு, 260/ந/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, காந்திநகர், கதவு எண்.93T/362 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ர. தௌலத் ஹுசைன்கான் என்பவர் தமது 30.08.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய கண்காணிப்பிற்குட்பட்ட ஜீம்மா மாஸ்க் வக்ஃப் என அரசிதழ் வரிசை எண். GS/162/திருச்சி என குறிப்பிடப்படும் ஹஜரத் ஹுசைன் மஸ்தான் தர்ஹா, ஹஜரத் ஹுசைன் மஸ்தான் பள்ளிவாசல் மற்றும் கபரஸ்தான் ஆகியவை நீண்ட பாரம்பரியம் கொண்ட சுமார் 1000 ஆண்டுகள் பழமையான வக்ப் ஆகும். இவ்வக்ஃபிற்கு சுமார் 15.80 ஏக்கர் நிலங்கள் தர்ஹாவின் பராமரிப்பிற்கான வக்ஃப் நிலங்கள் ஆகும். இவ்வக்ஃபின் நிலங்களை தனியார் சிலர் சட்டத்திற்கு புறம்பாக மணப்பாறை நகராட்சி ஊழியர்கள் துணையுடன் மனைப் பிரிவு செய்ய முயற்சித்தபோது அதனை எதிர்த்து தர்ஹா பரம்பரை மனைப் பிரிவு செய்ய முயற்சித்த போது அதனை எதிர்த்து தர்ஹா பரம்பரை முத்தவல்லி ர. தௌலத் ஹுசைன் கான் என்பவரால் மணப்பாறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 282/2001–ல் தாவா தொடரப்பட்டு தீர்ப்பு நாள் 30.06.2015–ன்படி நகராட்சியால் மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் வரைபட அனுமதி வழங்க கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மணப்பாறை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.282/2001 தீர்ப்பாணைக்கு எதிராக மணப்பாறை நகராட்சி ஆணையர் எப்.1/4384/09 நாள் 06.10.2019 மற்றும் ந. க. சி1/4433/2007/நாள் 02.01.2008–ஆம் தேதிய கடிதங்களின்படி இவ்வக்ஃப் நிலங்களில் மனைப் பிரிவு அங்கீகாரம் மற்றும் வரைபட அனுமதியின்றி அத்துமீறி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு வீட்டு வரி விதிப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தெருவிளக்கு, மின்வசதி மற்றும் இதரவசதிகள் மணப்பாறை நகராட்சியால் சட்டத்திற்கு புறம்பாக செய்து தரப்பட்டுள்ளது என்றும் மனைப் பிரிவு அங்கீகாரம் பெறாமல் நகராட்சி அலுவலர்களுக்கு பெரும் தொகையினை கையூட்டாக கொடுத்து சட்டத்திற்கு புறம்பாக வக்ஃப் நிலங்களில் அத்துமீறி பலஅடுக்கு மாடி வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு மணப்பாறை நகராட்சி அலுவலர்கள் துணை போகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், மணப்பாறை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு எண். 282/2001 நாள் 30.06.2015–க்கு எதிராக வக்ஃப் நிலங்களில் வக்ஃப் வாரிய அனுமதி ஏதும் பெறாமலும், சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் புறம்பாகவும் திருச்சிராப்பள்ளி நகரமைப்பு இயக்குனரது மனைப் பிரிவு அங்கீகாரம் பெறாமல் தற்பொழுது மணப்பாறை நகராட்சி அலுவலர்கள் ஒத்துழைப்போடும், துணையோடும் அத்துமீறி புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்களை உரிய விதிகளின்படி இடித்து அப்புறப்படுத்தவும், இவ்வீடுகளுக்கு மணப்பாறை நகராட்சியால் சட்டப்பூர்வமின்றி வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை துண்டித்தும், உரிய அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள மின் டிரான்ஸ்பார்மர் மற்றும் தெருவிளக்குகளை அப்புறப்படுத்தியும் மேற்கண்ட வக்ஃப் இடங்களில் உரிய அனுமதியின்றி எந்தவித அபிவிருத்தியும் செய்யக் கூடாதென உத்திரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்".

2. மனுதாரரின் புகார் மனு குறித்து மணப்பாறை நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 11.09.2023 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) மணப்பாறை நகராட்சி ஆணையாளர் தனது 06.10.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

மணப்பாறை நகராட்சி வார்டு எண்.10 காந்தி நகர், விஸ்தரிப்பு, செவலூர் Revenue கிராம சர்வே 759/1, 759/4, 759/5, 759/6, 760, 762/2ல் கூடுதல் 15.80 ஏக்கர் ஆகும். இப்பகுதியில் முஸ்லிம் மற்றும் இந்துக்கள் வசித்து வருகிறார்கள். ஏற்கனவே இப்பகுதியில் பொதுமக்கள் வசித்து வருவதால் அவர்களுக்கு தேவையயன அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்வதற்கான குடிநீர், தெருவிளக்குகள், வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட பகுதியிலிருந்து பொதுமக்கள் சாலை வசதி இல்லாமல் பள்ளி குழந்தைகள், பொதுமக்கள் போக்குவரத்திற்கு மழைக் காலங்களில் சென்றுவர முறையான சாலை வசதி இல்லாததால் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று ($15^{th}$ CFC) மத்திய நிதிக்குழு மான்யம் 2022–23–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மேற்படி இடத்தில் சாலை அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டு முறையாக ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டும் நகர் அனுமதியும் பெறப்பட்டு பணிகள் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேற்படி, பணியினை துவங்கும் நிலையில் பணியினை செய்ய விடாமலும் மேற்படி இடம் வக்ப் வாரியத்திற்கு சொந்தமான இடம் என்று கூறினார்கள். இதனடிப்படையில் பணியினை செய்ய இயலாமல் போனதாலும், திட்டப்பணி அரசுக்கு அறிக்கை கொடுக்க வேண்டி அவசியம் கருதியும் உடனடியாக மாற்று பணிகள் செய்ய இடம் தேர்வு செய்யப்பட்டு மீண்டும் முறையாக

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் மூலமாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே மேற்கண்ட இடத்தில் எவ்விதமான பணியும் நகராட்சி மூலம் செய்யவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 15.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் மூலமாக 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5. மனுதாரர் திரு. ர. தௌலத் ஹுசைன் கான் 15.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு நேரடியாக ஆஜராகவில்லை.**

6. திருச்சிராபள்ளி மாவட்டம், மணப்பாறை நகராட்சி ஆணையரின் சார்பில் மணப்பாறை நகராட்சியில் பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணிபுரியும் திருமதி ரா. ரஞ்சனி என்பவர் 15.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பதிவு செய்துள்ளார்.

மனுதாரரால் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செவலூர் கிராமம் சர்வே எண்.759/1, 2, 4, 5, 6, 760, 762/2 மற்றும் 569/1 கொண்ட 15.80 ஏக்கர் பரப்பளவு இடத்தினை தஞ்சாவூர் நிலவரித்திட்ட உதவி அலுவலரின் நீதிமன்ற ஆணை நாள் 30.11.1988–ன்படி திரு. எம். நூர்கான் த/பெ. முகம்மதுகான் என்பவருக்கு பட்டா வழங்க ஆணையிடப்பட்டு மேற்படி திரு எம்.நூர்கான் த/பெ.முகம்மதுகான் என்பவர் 1991–ஆம் ஆண்டு முதல் சுமார் 50 நபர்களுக்கு மேல் மேற்படி இடத்தினை விற்பனை செய்துள்ளார். மேலும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியில் குடியிருந்து வரும் பொதுமக்கள் சுமார் 50 எண்ணிக்கையிலான நிலங்களை பத்திரப்பதிவு செய்து கிரையம் பெற்று குடியிருந்து வருகின்றனர். பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவணங்களின்படி அப்பகுதியில் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டி வசித்து வரும் பொதுமக்களின் கோரிக்கையின்படி சுமார் 20 வருடங்களுக்கும் முன்பே குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்பு மின்வாரியம் மூலம் மின்மாற்றியும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பகுதியில் வசித்து வரும் பொதுமக்களின் கோரிக்கையின்படி, தார்சாலை அமைக்கும் பொருட்டு 15–வது மத்திய நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.24.50 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 03.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் ஆட்சேபனை மனு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP.(MD) No.13938/2023 மற்றும் 11762.2023–ன்படியும் மேற்கண்ட பணி துவங்கப்படாத நிலையில் இருந்ததால் அதே நிலை நீடிக்க உத்தரவிட்டதன் அடிப்படையில் மேற்கண்ட சாலை பணியினை தொடர்ந்து மேற்கொள்ளாமல் கைவிடப்பட்டது. மேற்கண்ட வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது.

மனுதாரர் தெரிவிக்கும் வழக்கின் அடிப்படையில் அப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வருவாய் துறை மூலம் வழங்கப்பட்ட பட்டா, அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பதிவு செய்யப்பட்ட பத்திர ஆவணங்கள் தொடர்பான தற்போதைய நிலையினை வட்டாட்சியரிடமிருந்து உரிய விபர அறிக்கை பெற வேண்டியுள்ளது. மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள வழக்கின் தீர்ப்பாணையின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மேற்கண்ட இடம் தொடர்பாக மேலும் ஏதேனும் வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதா எனவும், அப்பகுதியில் பல வருடங்களாக முன்பு அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்

மற்றும் தெருவிளக்குகள் மற்றும் மின்மாற்றியை அகற்றினால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் யாரேனும் இந்நகராட்சியின் மீது வழக்கு தொடர வாய்ப்புள்ளதா எனவும் அரசு வழக்கறிஞரிடம் உரிய சட்டக் கருத்துரு பெற வேண்டியுள்ளது.

எனவே மனுதாரர் தெரிவித்த பகுதியில் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக பொதுமக்களுக்கு ஏற்படுத்தி கொடுத்த அடிப்படை வசதிகளான குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் தெருவிளக்கு வசதிகளை அப்புறப்படுத்துவது குறித்து முடிவெடுக்கும் பொருட்டு மேற்கண்ட விபர ஆவணங்களை பெற்று கூர்ந்தாய்வு செய்த பின்பே உரியநடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்பதையும், மேலும் மனுதாரர் ஆட்சேபனை செய்த பின்பு மேற்கண்ட பகுதியில் எவ்வித அடிப்படை வசதி பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்ற விபரத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

i. மனுதாரர் தெரிவித்துள்ள புகார் மனு மீது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP.(MD) No.13938/2023 மற்றும் 11762/2023–ன்படி நிலுவையில் இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ii. மணப்பாறை உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.282/2001, நாள் 30.06.2015–ன்படி மணப்பாறை நகராட்சி வரைபட அனுமதி வழங்கப்பட கூடாதென நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து 05.06.2023 முதலே புகார் மனு அளித்து வருகிறார். அதனடிப்படையில் 05.06.2023க்குப் பிறகு மணப்பாறை நகராட்சியில் வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படுவதில்லை.

iii. மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள பகுதியில் அடிப்படை வசதிகளான குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் தெருவிளக்குகள் மற்றும் டிரான்ஸ்பார்மர் வசதிகளை அப்புறப்படுத்துவது குறித்து கூர்ந்தாய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

iv. மேலும் 14.10.2024 நாளிட்ட மணப்பாறை நகராட்சி ஆணையர் (கூபொ) அவர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விபரங்களை மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மணப்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை, மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணிபுரியும் திருமதி. ரா. ரஞ்சனி என்பவரது வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மேற்படி பகுதியில் வசித்து வரும் பொதுமக்களின் கோரிக்கையின்படி, தார்சாலை அமைக்கும் பொருட்டு 15–வது மத்திய நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.24.50 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 03.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் முறையீட்டு மனுதாரரின் ஆட்சேபனை மனு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP. (MD) No. 13938 / 2023 மற்றும் 11762/2023–ன்படி மேற்கண்ட சாலை பணியினை தொடர்ந்து மேற்கொள்ளாமல் கைவிடப்பட்டது. மேற்கண்ட வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது என மணப்பாறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மணப்பாறை நகராட்சி அலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலத்தின் மூலம் தெரிய வருகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to

(a) Xxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquirieis Act 1962 or any matter pending before a Court.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள பொருள் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மேற்காணும் சட்டப்பிரிவு 10 (3) (b)-ன்படி, இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 18 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.ர.தௌலத் ஹுசைன் கான்,
கதவு எண்.93T/362, காந்தி நகர்,
மணப்பாறை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்,

2 மணப்பாறை நகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)